**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR QUARRYING PROPOSAL OVER AN EXTENT OF 2.92.00 HA - M/S. S. SOUNDARARAJAN ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F.NO. 922/2, 922/3, 922/4 OF NATHIKUDI VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 24.07.2025, 11.00 A.M AT M/S.LORD P.C ARUNACHALANADAR AVUDAITHAYAMMAL THIRUMANA MANDAPAM, DOOR NO. 1210, POOLAVURANI VILLAGE, SIVAKASI TO VILAMPATTI ROAD, SIVAKASI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S.K.Kanagaraj | : | Revenue Divisional Officer<br>Sattur,<br>Virudhunagar District. |
| 2 | Er. J. Hamoneth Joesun | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | Er. V.Kalaijothi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 4 | Tmt.N.Kalaivani | : | Tahsildar<br>Vembakottai |
| | As per Attendance Register | : | Government Officials, Public and Project proponent 49 Nos<br>(List enclosed). |

The public hearing was held on 24.07.2025 at 11.00AM at M/s.Lord P.C Arunachalanadar Avudaithayammal Thirumana Mandapam, Door No. 1210, Poolavurani Village, Sivakasi To Vilampatti Road, Sivakasi Taluk, Virudhunagar District under EIA Notifications, 2006 for the Quarry proposal over an extent of 2.92.00 Ha - M/s.S.Soundararajan Rough Stone and Gravel Quarry, S.F.No. 922/2, 922/3, 922/4 of Nathikudi Village, Vembakottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinakaran" and "The New Indian Express" on

11.06.2025. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written statements would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. Subsequently, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s. S. Soundararajan Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

Further, the public has furnished their views with respect to the project as follows –

1. **Mr. Muthusamy, Nathikudi Village (Formerly Ward Member)**

He questioned that, during the previous Public hearing, you said that the Public Hearing will be conducted in Nathikudi village why now you are conducting this public hearing at Sivakasi? He further said that, the People did not hear anything that the officials said in this meeting, how can the People listen to what I said ? He said that, most of the People lived in Nathikudi village, who could be affected by this proposed quarry, but totally 50 members only attended in this meeting, out of this 50 numbers, 25 members were favoured to the quarry. He said that, the peoples living in the areas of Nathikudi, Subramaniapuram and Thiruvengadapuram villages, which have already been affected due to operation of similar type quarries but the officials not informed about this meeting to said affected village Peoples. Therefore, he requested that, this meeting be conducted again in Nathikudi village. He further stated that, this proposed project will affect the Agricultural land who rely on the Sengulam Kammoi in Nathikudi village, as well as those who have own land in Nathikudi village and those who have constructed houses there. However, he said none of the peoples from the nearest villages attend to this meeting as they did not know about this public hearing . Therefore, he requested that, this meeting be cancelled and again to be held in Nathikudi village.

**2. Mr. Azhakumalai, Subramaniapuram Village (Former Union Councilor)**

He said that, villages will develop only if Industrial prosperity increase, and the period of 2024-2025 an income of Rs. 93 lakhs has been generated from the District Mineral Fund, out of which Rs. 31 lakhs will be utilize to construct facilities like Marriage halls and Schools. He said that, such type of quarrying projects should be supported for the development of villages.

**3. Mr. S. Rajendran, Social Activist**

He said that, there is no benefit to the Public or Government, by opposing such a project and it is not our intention to prevent this project. He further said that, he supports this project, but nevertheless requested that this quarry be operated without any harm to the Peoples. He further said that. during School hours from 07.50 to 09.00 AM , there is traffic congestion due to movement of heavy vehicles from this quarry, and there are five Numbers of schools are located in these areas, there is traffic congestion due to heavy vehicles moving at high speed in the morning hours. Considering the above he requested the drivers to avoid operating the heavy vehicles in peak hours. He said that, there are many numbers of quarries are operated in Nathikudi village, he requested the quarry owners to improve road facilities in the Nathikudi village. He stated that, such projects cause a lot of harm to the public, so he would support this project if the above-mentioned defects were rectified. He also said that, due to movement of heavy vehicles, the trees on the roadside are being cut down and he will welcome this project if the operation of this quarries will help to the Public without destroying the nature.

**4. Mr. Mayilvahanam, Subramaniapuram Village**

He said that , the establishment of this quarry will benefit everyone, for example many accident are happening frequently in firecracker factory, even though Peoples still working in that fire crackers unit .Similarly, he said that in the past years , employment opportunities were provided to the public for manually stone crushing in quarries, and now, when operating a quarry, there is a need for public to operate vehicles like JCB & tipper lorries, so the peoples are getting employment opportunities. Therefore, he said that by allowing such type of projects without encroaching on the streams coming to the agricultural land, the village panchayat will get income, and it would provide necessary basic facilities to the public. Therefore, he welcomed this project.

**5. Mr. Bhagat Singh, Ammapatti Village**

He said that, mineral resources are needs to be protected, but we are conducting this meeting to destroy it. Further he said that, It is true the construction activities will happened because of the establishment of such quarries, but the conflict is caused by the damages to Public. He said that about Ten years ago, the wells located in Nathikudi and the surrounding villages of Subramaniapuram, Duraisamipuram and Oorampatti villages met the water demands of the Public .

He further said that, if we look the pH value in that wells, there is a huge changes before ten years ago and now. Due to this, the public are suffering from diseases like infections. The people of Nathikudi and its surrounding areas are relying on Kanmoi for their agriculture and now all those Kanmoi have been converted into patta land. He said that agricultural land is being affected by the operation of many numbers of quarries in Mamsapuram- Paraipatti area and this also cause more traffic congestion . He requested that, compensation be provided for the damage caused by the establishment of such quarries.

**6.Mr.K.R Pandi, Nathikudi Village**

He said that, there is no Environmental impact for operation of this quarry, and that last month, Rs. 93,80,000 was provided from the District Mineral Fund to implement basic needs to the Public and same is under process. He said that every year required fund for development of villages and same is being provided from the Mineral Resources Fund. Therefore, such projects are necessary to provide basic facilities such as Health, School Education, Water supply etc., to the Public. He also said that we can request the quarry owners to operate without noise due to blasting in the quarries. He said that last year approximately 700.17 hectares of land was cultivated. Therefore, the agriculture is prosperous and there is no impact from this quarry. Therefore, he expressed his opinion that Environmental clearance should be given to this project.

**7. Mr. Subramanian, Nathikudi Village**

He said that, it is true, if licenses issued to these quarries it will provide employment opportunities to the Public , but the operation of this quarry should not affect another business . He also said that, due to operation of many quarries around Sengulam Kanmoi streams are being encroached and water flow is being blocked.

He said that due to the encroachment of oodai, a scarcity for water prevails in this area and only those who had their own wells were able to farm last year. He also said that the harvesting has been reduced to once in a year due to operation of this quarries and encroachment in the kanmois. He added that, if the some situation prevails, this may lead to starvation in this area. He also said that the blasting of quarries is causing excessive Noise pollution and causing vibrations in nearby houses.

**8. Farmer, Nathikudi Village**

He said that, it was regrettable that this meeting was being conducted here instead of in Nathikudi village. He said that, many villages like Duraisamipuram Thiruvenkadapuram , Manipatti and Ammapatti ..etc will get water supply only if the water flow increases in the Kammoi in Nadikudi village. He also said that , all the houses in Nathikkudi Village are constructed many years ago and the houses are cracking due to excessive blasting of quarries . Therefore, he requested that license should not be issued to his quarry.

**9. Mr. Muthuramalingam, Nathikudi Village**

He asked why the Public hearing for this proposed quarry conducted in Sivakasi even after repeated requests to conduct it in Nathikudi village. He said that, the location of this quarry is near to Kammoi and that the water quality is changing and causing many diseases to Public, so he asked not to issue license to this quarry.

**10. Mr. Muthusamy , Nathikudi Village (He has already spoken as the first person)**

He said that, agriculture was already prevalent in Nathikudi village, but now it decreased due to lack of yield. Further he said that, such projects will only create to water scarcity in the future. He also said that, due to quarrying of sand in the hilly areas, rainwater is not being stored and agriculture is also being affected. He said that, already a Public Hearing was conducted previous month for a quarry proposed by M/s.Sai Ram Industry in an area of five acres. If the quarry commences operation, pits will be formed. Subsequently, rainwater starts stagnating in the quarry pits. If the quarry management spares that water for agricultured purpose, it will help in farming for about five years. He also said that, there are more numbers of quarries operated under Nathikudi Panchayat and if we give the water stored in these quarries , we will do agriculture for many years.

He said that this meeting is being held to destroy agriculture. He also said that ,due to the establishment of such quarries, the quality of water has changed . Therefore, he said that license should not be given for such projects in Nathikudi village.

**11. Mr.Bhagat Singh, Ammapatti Village (He has already spoken as the 5th person)**

He said that, if the water stored in existing quarries pits is released into the canals, agriculture will automatically increase and therefore, such projects are necessary but they should not destroy human resources. Therefore, he requested that quarry operation be carried out to protect the Nature. He also asked that, the areas around Mamsapuram to Paaripatti villages be analysed to determine fit for human living.

**12. Mr. Subramanian, Nathikudi Village (He has already spoken as the seventh person)**

He said that, he had not attended earlier conducted public hearing in same Marriage hall , and that he had submitted a written complaint regarding the quarry, but no response had been received. He also said that, there was no water flow in the Kanmoi because the water supply streams had been occupied due to quarrying operation. Therefore, he requested that priority be given to agriculture and the water level in the wells has decreased due to the excessive depth of the quarrying operation. Therefore, do not give permission to this proposed quarry.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their furthermore views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and informed that the Minutes of the Meeting along with Compact Disc consisting the entire videographed Public Hearing will be forwarded to the SEIAA for further actions. He also thanked all and requested to furnish their views if any in written of petitions.

Total number of written petitions received - 15

With this, the meeting came to the end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar.

Revenue Divisional Officer,
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 4 – pages, 49 persons).
2. Videograph of public hearing meeting (CD format).
3. Copy of Public Notices (Both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், நதிக்குடி கிராமம், புல எண்கள். 922/2, 922/3, 922/4-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/எ்.S.சவுந்தரராஜன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 24.07.2025 முற்பகல் 11.00 மணியளவில் தி/எ். லார்டு பி.சி அருணாச்சல நாடார் ஆவுடைத்தாயம்மாள் திருமண மண்டபம், கதவு எண். 1210, பூலாவூரணி கிராமம், சிவகாசி – விளாம்பட்டி ரோடு, சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.S.K.கனகராஜ் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி. ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 3 | பொறி.வே.கலைஜோதி | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 4 | திருமதி.N.கலைவாணி | : | வட்டாட்சியர்,<br>வெம்பக்கோட்டை |
| | வருகை பதிவேட்டின் படி | : | அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 49 நபர்கள்<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது). |

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், நதிக்குடி கிராமம், புல எண். 922/2, 922/3, 922/4-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/எ்.S.சவுந்தரராஜன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் தி/எ். லார்டு பி.சி அருணாச்சலநாடார் ஆவுடைத்தாயம்மாள் திருமண மண்டபம், கதவு எண். 1210, பூலாவூரணி கிராமம், சிவகாசி – விளாம்பட்டி ரோடு, சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 24.07.2025 முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர், ஏனைய அரசு அதிகாரிகள்,பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினகரன்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆகிய நாளிதழ்களில் 11.06.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்புகூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன் பின் தி/எ்.S.சவுந்தரராஜன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. **திரு. முத்துச்சாமி, நதிக்குடி கிராமம் (முன்னாள் வார்டு உறுப்பினர்)**

திரு.முத்துச்சாமி அவர்கள், இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்தினை நதிக்குடி கிராமத்தில் நடத்துவதாக ஏற்கனவே நடைபெற்ற கருத்துக் கேட்புக் கூட்டத்தின் போது தெரிவித்தீர்கள் ஆனால், ஏன் தற்போது இதே இடத்தில் இந்த கூட்டத்தினை நடத்துகிறீர்கள் என வினாவினார். மேலும், இந்த கூட்டத்தில் அதிகாரிகள் பேசியது

ஒன்றுமே மக்களுக்கு கேட்கவில்லை என்றும், இப்படி இருக்கும்போது நான் பேசுவது மட்டும் எப்படி மக்களுக்கு கேட்கும் எனக் கேட்டார். இந்த திட்டத்தினால் பாதிப்படைய கூடிய மக்கள் நதிக்குடி கிராமத்தில் தான் வாழ்கின்றனர் எனவும், ஆனால் இங்கு வந்திருக்க கூடிய 50 நபர்களில் 25 நபர்கள் குவாரிக்கு சம்பந்தப்பட்டவர்களாக இருப்பதாக தெரிவித்தார். மேலும், நதிக்குடி, சுப்பிரமணியாபுரம் மற்றும் திருவேங்கடபுரம் ஆகிய கிராமங்களில் வாழும் விவசாயம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த கருத்து கேட்புக் கூட்டம் நடப்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை என்றும், எனவே இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தினை நதிக்குடி கிராமத்தில் மீண்டும் நடத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். மேலும், நதிக்குடி கிராமத்திற்கு பாத்தியப்பட்ட செங்குளம் கண்மாயை நம்பியுள்ள விவசாயிகளும் மற்றும் நதிக்குடி கிராமத்தில் நிலம் வைத்திருப்பவர்களும், அங்கு வீடு கட்டி வசிப்பவர்களும் இந்த திட்டத்தினால் பாதிப்படைவதாகவும் இக்கருத்து கேட்புக் கூட்டம் பற்றி தெரியாததால் அங்குள்ள மக்கள் யாருமே இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என தெரிவித்தார். ஆகையால் இந்த கூட்டத்தினை ரத்து செய்து நதிக்குடி கிராமத்திலே மீண்டும் நடத்த வேண்டும் எனக் கோரிக்கை வைத்தார்.

2. **<u>திரு.அழகுமலை, சுப்பிரமணியாபுரம் கிராமம் (முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்)</u>**

திரு.அழகுமலை அவர்கள், தொழில்வளம் பெருகினால்தான் கிராமங்கள் முன்னேற்றமடையும் என்றும், அந்த வகையில் 2024 -2025-ல் மட்டும் ரூபாய் 93 லட்சம் கனிம வள நிதியின் மூலம் வருமானம் வந்திருப்பதாகவும் அதில் குறிப்பாக ரூபாய் 31 லட்சம் தொகையானது கிராமங்களுக்கு கல்யாண மண்டபம், பள்ளி வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை செய்து தருவதற்காக உபயோகிப்பதாகவும் கூறினார். இவ்வாறு கிராமங்கள் முன்னேற்றமடைய இது போன்ற திட்டங்கள் வர வேண்டும் என கூறினார்.

**<u>3.திரு.S.ராஜேந்திரன், சமூக ஆர்வலர்</u>**

திரு.S.ராஜேந்திரன் அவர்கள், எந்தவொரு திட்டத்தினையும் ஆதரிக்காமல் முடக்குவதால் பொது மக்களுக்கோ, அரசு அதிகாரிகளுக்கோ எந்த வித பயனும் இல்லை என்றும், அதே போல் இத்திட்டத்தினையும் வராமல் தடுப்பது என்பது எங்களின் நோக்கமும் இல்லை எனக் கூறினார். மேலும், இத்திட்டத்தினை ஆதரிப்பதாகவும், இருப்பினும் அங்குள்ள மக்களுக்கு எந்த வித பாதிப்பும் இன்றி இந்த குவாரியை இயக்குமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், பள்ளி நேரங்களில் காலை 07.50 முதல் 09.00 மணி வரை இந்த குவாரியிலிருந்து வரும் கனரக வாகனங்களினால் போக்குவரத்து நெரிசல் வருவதாகவும், இந்த பகுதிகளில் ஏறத்தாழ ஐந்து பள்ளிகள் அமைந்திருப்பதாகவும், இவ்வாறு கனரக வாகனங்கள் காலை நேரங்களில் அதிவேகமாக செல்வதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் கூறினார்.

மேலும், இதனை கருத்தில் கொண்டு குவாரிகளின் உரிமையாளர்கள் கனரக வாகனங்களை இயக்க அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொண்டார். இது போன்ற குவாரிகள் நதிக்குடி கிராமத்தில் அதிகம் அமைந்திருப்பதாகவும் மற்றும் அதிலிருந்து வரும் வருமானத்தில் கிராமங்களில் சாலை வசதிகளை மேம்படுத்தி தருமாறும் குவாரி உரிமையாளரிடம் கோரிக்கை வைத்தார். இது போன்ற திட்டங்கள் வருவதினால் பொதுமக்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படுகிறது ஆகையால் மேற்கூறிய கோரிக்கைகளை நிவர்த்தி செய்தால் மட்டுமே இத்திட்டத்தினை ஆதரிப்பதாகவும் தனது கருத்தினை பதிவு செய்தார். மேலும், சாலைப்பகுதிகளில் உள்ள மரங்களை கனரக வாகனங்களில் போக்குவரத்திற்காக குவாரி உரிமையாளர்கள் வெட்டி வருவதாகவும் இவ்வாறு இயற்கையை அழிக்காமல் ஊர் மக்களுக்கு நல்லது செய்தால் இத்திட்டத்தினை ஆதரிப்பதாக தெரிவித்தார்.

**4.திரு.மயில்வாகனம், சுப்பிரமணியாபுரம் கிராமம்**

திரு.மயில்வாகனம் அவர்கள், இந்த குவாரி தொழில் என்பது எல்லோருக்கும் பயனளிக்க கூடிய ஒன்றாக உள்ளதாகவும், உதாரணமாக பட்டாசு தொழிலுக்கு செல்வதால் அதிக நபர்கள் இறப்பதாகவும் இருப்பினும் அந்த தொழிலை நோக்கித்தான் மக்கள் மீண்டும் செல்கின்றனர் எனக் கூறினார். அதேபோல் முன்பெல்லாம் கல் உடைப்பிற்கு பொதுமக்களை பயன்படுத்தியதால் வேலை வாய்ப்பு கிடைத்தது என்றும், தற்போது கல்குவாரிகள் இயக்கும்போது JCB, டிப்பர் லாரி போன்ற வாகனங்களின் இயக்கத்திற்கு பொது மக்களின் தேவை இருப்பதால் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதாகவும் தெரிவித்தார். ஆகவே, விவசாய நிலத்திற்கு வரும் நீரோடைகளை ஆக்கிரமிப்பு செய்யாமல் இந்த குவாரியினை இயக்குமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், இது போன்ற திட்டங்களை ஆதரிப்பதால் கிராம பஞ்சாயத்திற்கு வருமானம் கிடைக்கும் என்றும், அதனைக் கொண்டு கிராமங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கலாம் எனவும் தெரிவித்தார். ஆகவே, இத்திட்டத்தினை வரவேற்பதாக கூறினார்.

**5.திரு.பகத்சிங், அம்மாபட்டி கிராமம்**

திரு.பகத்சிங் அவர்கள், கனிம வளம் என்பது பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று, ஆனால் அதனை எவ்வாறு அழிப்பது என்பதற்காகவே இக்கருத்து கேட்புக் கூட்டத்தினை நடத்துகின்றோம் எனத் தெரிவித்தார். இது போன்ற கல்குவாரிகள் அமைவதால் தான் கட்டுமான பணிகள் நடக்கும் என்பது உண்மைதான். ஆனால், அதனால் வரக்கூடிய சேதாரங்களினால் தான் பாதிப்பு ஏற்படுவதாகவும், கூறினார். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நதிக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளான சுப்பிரமணியபுரம், துரைச்சாமிபுரம் மற்றும் ஊராம்பட்டி கிராமங்களிலுள்ள

கிணறுகள் தான் சிவகாசி வரையில் உள்ள கிராம மக்களின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ததாகவும், தற்போதும் பூர்த்தி செய்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அந்த கிணறுகளிலுள்ள pH மதிப்பை எடுத்து பார்த்தால் பத்து ஆண்டுகளுக்கு முன்பும், தற்போதும் மிகப்பெரிய மாற்றம் இருப்பதாகவும் கூறினார். மேலும், இதனால் கிராம மக்களுக்கு நோய் தொற்று போன்ற பாதிப்பு ஏற்படுவதாகவும் மற்றும் கண்மாய்களை நம்பிதான் நதிக்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயம் செய்வதாகவும், ஆனால் தற்போது நீரோடை பகுதிகள் அனைத்தும் பட்டா நிலமாக மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். மேலும், மம்சாபுரம் - பாறைப்பட்டி பகுதிகளில் அதிக குவாரிகள் அமைந்திருப்பதால் அங்குள்ள கனரக வாகனங்களின் போக்குவரத்தினால் விவசாய நிலம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். இது போன்ற குவாரிகள் அமைவதினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்.

**<u>6.திரு.K.R பாண்டி, நதிக்குடி கிராமம்</u>**

திரு. K.R பாண்டி அவர்கள், இந்த குவாரி இயங்குவதால் எந்த வித சுற்றுச்சூழல் பாதிப்பும் இல்லை எனவும், மேலும், கடந்த மாதம் நதிக்குடி ஊராட்சியை சுற்றியுள்ள கிராம மக்களுக்கு அடிப்படை திட்டங்களை நிறைவேற்றவதற்கு கனிமவள நிதியிலிருந்து தொண்ணுற்று மூன்று லட்சத்து என்பதாயிரம் தொகையினை வழங்கி தற்போது அதற்கான திட்ட பணிகளும் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். இதுபோல் ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சி திட்ட பணிகளுக்கான தொகை கனிமவள நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். ஆகவே இது போன்ற திட்டங்கள் அமைவதால் தான் கிராமங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான சுகாதாரம், பள்ளிக்கல்வி, தண்ணீர் வசதி போன்ற வசதிகள் கிடைப்பதாகவும் தெரிவித்தார். மேலும், குவாரிகளில் வெடி வைத்து தகர்க்கும்பொழுது சத்தமில்லாமல் இயக்குமாறு குவாரி உரிமையாளர்களிடம் நாம் கோரிக்கை வைக்கலாம் எனவும் தெரிவித்தார். கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 700.17 ஹெக்டேர் புன்செய் நிலங்களில் விவசாயம் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார். ஆகவே, நதிக்குடி பகுதிகளில் விவசாயம் நல்ல முறையில் நடைபெற்று வருவதாகவும், இந்த குவாரியினால் பாதிப்பு இல்லை என கூறினார். ஆகவே, இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்க வேண்டும் என அவரது கருத்தினை தெரிவித்தார்.

**<u>7.திரு.சுப்பிரமணியன், நதிக்குடி கிராமம்</u>**

திரு.சுப்பிரமணியன் அவர்கள், இந்த குவாரிகளுக்கு உரிமம் வழங்குவதால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பது உண்மைதான், இருப்பினும் ஒரு தொழில் நடத்துவதால் மற்றொரு தொழில் பாதிக்கக் கூடாது எனத் தெரிவித்தார். மேலும், செங்குளம் கண்மாயை சுற்றியுள்ள குவாரிகள் அனைத்துமே மேட்டுப்பட்டியிலிருந்து

வரக்கூடிய நீரோடையின் அருகில்தான் அமைந்திருப்பதாகவும் இதனால் ஓடைகள் ஆக்கிரமிக்கப்பட்டு நீர்வரத்து தடுக்கப்படுவதாக கூறி, இவ்வாறு நீரோடைகள்ஆக்கிரமிக்கப்பட்டதால் கடந்த வருடம் கிணறுகள் மூலம் நீர்பாசன வசதி பெற்றவர்கள் மட்டுமே விவசாயம் பார்த்தனர் என்றும், மேலும், ஒரு போகம் மட்டுமே விவசாயம் பார்ப்பதாகவும் இவ்வாறு நீரோடையினை ஆக்கிரமித்தால் சாப்பாட்டிற்கு கூட வழியில்லாத நிலை தான் ஏற்படும் என்றார். மேலும், குவாரிகளில் வெடி போடுவதால் அதீத சப்தம் வருவதாகவும் இதனால் அருகிலுள்ள வீடுகளில் அதிர்வு ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

**8.விவசாயி, நதிக்குடி கிராமம்**

இந்த கூட்டத்தினை நதிக்குடி கிராமத்தில் நடத்தாமல் இங்கு நடத்துவது வருத்தம் தருவதாகவும், நதிக்குடி கிராமத்திலுள்ள கண்மாய்களில் நீர் பெருகினால் தான் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங்களான துரைச்சாமிபுரம், திருவேங்கடபுரம், மணிப்பட்டி, அம்மாபட்டி, போன்ற பல கிராமங்களுக்கு நீர்வரத்து கிடைக்கும் என்றும் தெரிவித்தார். மேலும், பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள வீடுகளில் அதிக வெடி போடுவதால் விரிசல்கள் ஏற்படுவதாக தெரிவித்தார். ஆகவே, இந்த குவாரிக்கு உரிமம் வழங்குவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டார்.

**9.திரு.முத்துராமலிங்கம், நதிக்குடி கிராமம்**

திரு.முத்துராமலிங்கம் அவர்கள், ஏற்கனவே பலமுறை இது போன்று நதிக்குடியில் அமையும் குவாரியின் கருத்துக்கேட்பு கூட்டத்தினை நதிக்குடி கிராமத்திலேயே நடத்துமாறு கேட்டுக்கொண்ட பின்பும் இங்கு ஏன் நடத்துகிறீர்கள் எனக் கேட்டார்? மேலும், இந்தக் குவாரியானது கண்மாய்க்கு அருகில் தான் அமைந்திருப்பதாகவும், இதனால் தற்போது தண்ணீர் நிலை மாறி நோய் ஏற்படுவதாகவும் தெரிவித்தார். ஆகவே இந்த குவாரிக்கு உரிமம் வழங்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

**10.திரு.முத்துச்சாமி நதிக்குடி கிராமம் (ஏற்கனவே முதல் நபராக தனது கருத்தினை பதிவு செய்தவர்)**

திரு.முத்துச்சாமி அவர்கள், நதிக்குடி கிராமத்தில் ஏற்கனவே விவசாயம் அதிகமாக நடைபெற்றது. ஆனால், தற்போது விவசாயம் செய்வது குறைந்து விட்டது காரணம் விளைச்சல் இல்லை எனவும், மேலும் இது போன்ற திட்டங்கள் வருவதால் இனிவரும் காலங்களில் குடிநீர் தட்டுப்பாடு தான் ஏற்படும் என்றும் தெரிவித்தார். மேலும், மேட்டுப்பகுதிகளில் உள்ள மணலை எடுப்பதால் மழைநீரினை தேக்கி வைக்க முடியாமல் விவசாயம் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார். மேலும், ஏற்கனவே ஐந்து ஏக்கரில் குவாரி அமைப்பதற்கு கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தப்பட்ட தி/ள்.சாய்ராம்

நிறுவனத்திற்கு உரிமம் வழங்கினால், அந்த குவாரி முடிந்த பிறகு அங்கு சேகரிக்கப்படும் மழைநீரினை விவசாயத்திற்கு கொடுத்து உதவினால் சுமார் ஐந்து வருட காலத்திற்கு விவசாயம் பார்ப்பதற்கு உதவியாக இருக்கும் எனவும், மேலும், நதிக்குடி பஞ்சாயத்திற்குட்பட்ட கிராமத்தில் அதிக அளவு குவாரிகள் இருப்பதாகவும் இந்த குவாரிகளில் சேமிக்கப்படும் நீரினையும் கொடுத்தால் பல ஆண்டுகள் விவசாயம் செய்ய முடியும் என்றும், விவசாயத்தினை அழிப்பதற்காகவே இக்கூட்டம் நடத்துவதாகவும் தெரிவித்தார். மேலும், இதுபோன்ற குவாரிகள் அமைவதால் நீரின் தரம் மாறிவிட்டது எனவும், மற்றும் நீர் தட்டுப்பாடு வருவதாகவும் தெரிவித்தார். ஆகவே நதிக்குடி கிராமத்தில் இது போன்ற திட்டங்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது எனத் தெரிவித்தார்.

**<u>11.திரு.பகத்சிங், அம்மாபட்டி கிராமம் (ஏற்கனவே 5வது நபராக தனது கருத்தினை பதிவு செய்தவர்)</u>**

திரு.பகத்சிங் அவர்கள், குவாரிகளில் தேங்கும் தண்ணீர் கண்மாய்களில் பாய்ந்தால் தானாக விவசாயம் பெருகும் எனவும், ஆகவே இது போன்ற திட்டங்கள் தேவை ஆனால் மனித வளத்தை அழிக்காமல் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், மண்ணை காப்பாற்றி குவாரி பணிகளை செய்யுமாறும், மம்சாபுரம் மற்றும் பாறைப்பட்டி சுற்றியுள்ள பகுதிகள் மனிதன் வாழ்வதற்கு தகுதியானதா என அதிகாரிகள் ஆய்வு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

**<u>12.திரு.சுப்பிரமணியன், நதிக்குடி கிராமம் (ஏற்கனவே 7வது நபராக தனது கருத்தினை பதிவு செய்தவர்)</u>**

திரு.சுப்பிரமணியன் அவர்கள், ஏற்கனவே நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக்கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை எனவும், அதனால் அந்த குவாரி சம்மந்தப்பட்ட புகாரினை எழுத்துப்பூர்வமாக கொடுத்ததாகவும் அதற்கு பதில் கடிதம் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும், நீர் வரத்து ஓடை அழிக்கப்பட்டதால்தான் இங்குள்ள கண்மாய்களில் நீரோட்டம் இல்லை என்றும் தெரிவித்தார். ஆகவே விவசாயத்திற்கு முக்கியத்துவம் வழங்குமாறும் இதுபோன்ற குவாரியின் அதிகப்படியான ஆழத்தினால் அவரது கிணறுகளில் நீரின் மட்டமானது குறைந்து விட்டதாக கூறி இத்திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறுயாரும் முன்வராததால்,வருவாய் கோட்டாட்சியர்,சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,விருதுநகர் அவர்கள்

இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ அடங்கிய குறுந்தகடு மற்றும் எழுத்துபூர்வமான கூட்ட நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு பரிசீலினை செய்யும் பொருட்டு அனுப்பிவைக்கப்படும் எனவும், மற்றும் எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை - 15

அத்துடன் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 4 பக்கங்கள், 49 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).